# 3.8 கர்த்தராகிய இயேசுவை அறிவித்தல்

**வேத வசனம்:** ராஜ்யத்தினுடைய இந்தச் சுவிசேஷம் பூலோகமெங்குமுள்ள சகல ஜாதிகளுக்கும் சாட்சியாகப் பிரசங்கிக்கப்படும், அப்போது முடிவு வரும். மத்தேயு 24:14

**அறிக்கை:** அநேகர் விசுவாசித்து இரட்சிக்கப்படும்படிக்கு நாம் இயேசுவின் நாமத்தைப் பறைசாற்ற வேண்டும்.

**சத்தியம்:** தேவன் எல்லா மக்களையும் இரட்சிக்கத் தம்முடைய குமாரனை உலகத்திற்கு அனுப்பினார். அவரை விசுவாசிக்கிறவர்கள் ஆக்கினைத்தீர்ப்புக்குள்ளாகத் தீர்க்கப்படுவது இல்லை. ஆனால் அவரை விசுவாசிக்காதவர்கள் ஆக்கினைத்தீர்ப்புக்குட்பட்டாயிற்று. அதனால் நாம் கர்த்தராகிய இயேசுவைப் பறைசாற்றி அவரை விசுவாசித்து இரட்சிக்கப்படும்படி அநேகரை அழைக்கவேண்டும்.

## பாடக்குறிப்புகள்

* **இயேசுவின் இறுதி வார்த்தைகள்** -*மத். 28:18-20, அப். 2:21, ரோ 10:9*
* **சுவிசேஷத்தை எல்லா இடங்களிலும் பரப்புங்கள்** - *லூக்கா 9:35-36*
* **மனிதர் இரட்சகரை அறியச் செய்யுங்கள்** - *யோவான் 3:16,18*
* **சிலுவையின் செய்தி** - *1 கொரி. 1:18*

**வேதப்பகுதி**
*மத்தேயு 28:16-20*

## ஆர்வமூட்டும் வினாக்கள் (ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட கேள்விகளை விவாதிக்கலாம்)

- *ரோ. 6:23 மற்றும் 1 கொரி 15:3,4 ன்படி சிலுவையின் செய்தி என்ன?*
- *தேவனுடைய நாமத்தைப் பறைசாற்றுவது "மிகவும் அர்த்தமுள்ள வேலை" - இதை ஏற்றுக்கொள்ளுகிறீர்களா?*
- *தேவனுடைய நாமத்தைப் பறைசாற்ற எப்படிப்பட்ட சீஷர்களால் முடியும்?*

## உங்களது கதை என்ன?

மக்கள் உதவியற்றவர்களாய், தொல்லைகளை அனுபவிப்பவர்களாய் மேய்ப்பனற்ற ஆடுகளாய் இருந்தபடியால் அவர்கள் மீது கரிசனைக் கொண்டார். ஆகையால் அவர் எங்கும் சென்று உபதேசித்து மனிதர்களுடைய இதயம் ஆண்டவரிடம் திரும்பும்படி பிரசங்கித்து வந்தார். இரட்சிப்பு அனைவருக்கும் ஒன்றாக இருந்தாலும், ஏதாவது இரண்டு மனிதர்களின் கதைகள் கூட ஒன்று போல இருக்காது. உங்கள் சாட்சி எப்போதும் தனித்தன்மை உடையதே. சரி.. உங்கள் கதை என்ன? கீழே கொடுக்கப்பட்டுள்ள இடத்தை அதைப்பற்றி எழுதவோ அல்லது வரையவோ பயன்படுத்துங்கள்.

**சிந்திக்க:**
*மற்றவர்கள் முன்பாக எவ்விதம் சாட்சிகளாக இருக்க முடியும்?*

**செயல்**

இயேசுவைப் பற்றியச் சுவிசேஷத்தையும் இரட்சிப்பையும் இரகசியமாக வைக்காதேயுங்கள். உங்கள் சாட்சியை யாரிடமாவது இந்த வாரம் பகிர்ந்து கொள்ளுங்கள்.

**ஜெபம்:**
*சுவிசேஷத்தை அறிவிக்க தேவனிடம் தைரியமும் பெலனும் வேண்டி ஒரு ஜெபத்தை எழுதுங்கள்.*